www.Padasalai.Net

தமிழ் நாடு, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,

மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் திருமதி. மா. ஆர்த்தி, இ.ஆ.ப

ந.க. எண்:1292/ஆ2/நா.மு/ஒபக/2024, நாள் : 12.06.2024

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி நான் முதல்வன் திட்டம் - 2024 - 2025 கல்வியாண்டு – அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 9,10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி மதிப்பீடு (Baseline Assessment) நடைபெறுதல் மற்றும் நெறிமுறைகள் வழங்குதல் - சார்ந்து

******

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 9, 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டி மதிப்பீடு (Baseline Assessment) வருகின்ற ஜூன் மாதம் 19.06.2024 மற்றும் 20.06.2024 ஆம் தேதி 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் மற்றும் ஜூன் 18.06.2024 & 19.06.2024 ஆகிய தேதிகளில் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும், ஜூலை 02.07.2024 & 03.07.2024 ஆகிய தேதிகளில் 9 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் 03.07.2024 & 04.07.2024 ஆகிய தேதிகளில் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் உயர்கல்வி வழிகாட்டி மதிப்பீடு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

<u>மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் பொறுப்புகள்:</u>

- இணைப்பு -1 இல் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி (Baseline Assessment) மதிப்பீட்டை நடத்தி முடித்திட அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கு உரிய வழிகாட்டுதல்கள் வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

<u>மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கான பொறுப்புகள்:</u>

- தலைமையாசிரியர் மற்றும் உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு மேற்காண் வழிக்காட்டுதல்களை எடுத்துரைத்து அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் இம்மதிப்பீடு முழுமையாக நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.
- மதிப்பீட்டுத் தேர்வில் கலந்து கொண்ட / கொள்ளாத மாணவர்களின் தகவல்கள், கலந்து கொண்ட மாணவர்களின் தேர்வு முடிவுகள் உள்ளிட்ட விவரங்கள், தேர்வு முடிந்த ஓரிரு வாரங்களில் மாநில இயக்குநரகத்திலிருந்து மாவட்டங்களுக்கு பகிரப்படும்.

<u>தலைமை ஆசிரியர் மற்றும் உயர்கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியரின் பொறுப்புகள்:</u>

- பள்ளிகளில் மதிப்பீடு தடையின்றி செயல்படுத்தப்படுவதை உறுதிசெய்ய பின்வரும் தகவல்கள் அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் மேற்கொள்ளவேண்டும்.

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net

- http://locsrv.in:8080 என்ற இணைய தளத்தில் மதிப்பீட்டுக் கருவி தெரிகிறதா என்பதை அனைத்துப் பள்ளிகளும் சரிபார்க்க வேண்டும்.
- EMIS இல் அனைத்து மாணவர்களும் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.
- அனைத்து மாணவர்களின் விவரங்களும் சரியாகப் பதிவு செய்யப்பட்டவுடன், முன்பு செய்ததைப் போல HM/School உள்நுழைவைப் (credentials) பயன்படுத்தி நிர்வகி பக்கத்திலிருந்து நற்சான்றிதழ்களைப் புதுப்பிக்குமாறு பள்ளிகளுக்குத் தெரிவிக்கவும். *(Once all the students are enrolled correctly, kindly inform the schools to update the credentials from the manage page using HM/School login as done earlier)*

<u>9,10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு Basline Assessment நடைபெறும் நாட்களின் விவரங்கள்</u>

| தேதி | வகுப்பு | கேள்விகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 18.06.2024 & 19.06.2024 | 11 ஆம் வகுப்பு | 10கேள்விகள் |
| 19.06.2024 & 20.06.2024 | 12 ஆம் வகுப்பு | |
| 02.07.2024 & 03.07.2024 | 9 ஆம் வகுப்பு | |
| 03.07.2024 & 04.07.2024 | 10 ஆம் வகுப்பு | |

இணைப்பு

மதிப்பீட்டிற்கான செயல்பாட்டு வழிமுறைகள்

மாநில திட்ட இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

நகல்

1. செயலர், ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை
2. செயலர், வனத்துறை, சென்னை
3. செயலர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை
5. செயலர், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை
6. அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் (முதன்மை கல்வி அலுவலர் வழியாக)

Scanned with OKEN Scanner


www.Padasalai.Net


<u>உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களின் வழி வினாடி வினா மதிப்பீடுகள்:</u>

**<u>General Instructions:</u>**

- உயர் தொழிநுட்ப ஆய்வகத்தில் சர்வர் கணினியை எப்பொழுதும் ON செய்து வைத்திருக்கவும்.
- உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தை சுத்தமாக வைத்திருங்கள்.
- உயர் தொழிநுட்ப ஆய்வகத்தில் ஏற்படும் சந்தேகங்களையும் குறைகளையும் 14417 என்ற எண்ணிற்கு தொடர்பு கொண்டு தெரிவிக்கவும்.

1. பள்ளிகளில் அமைந்துள்ள உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள் (HiTech Labs) அனைத்தையும் முதலில் சர்வர் கணினியைக் கொண்டு இணைய வழியில் பதிவு செய்திருக்க வேண்டும். இதற்கு சர்வர் கணினியில் உள்ள இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியைப் பயன்படுத்த வேண்டும். இது ஒரு முறை மட்டுமே மேற்கொள்ள வேண்டிய செயலாகும். இந்த இணையதளம் உயர்தொழில்நுட்ப ஆய்வகங்களில் மட்டுமே செயல்படக் கூடியது.







2. சர்வர் கணினியை முறையாகப் பதிவு செய்திருப்பின், அடுத்த முறை http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியைத் திறந்தால், நம் பள்ளியின் பெயரும் UDISE எண்ணும் திரையில் தெரியும். இதில் ஏதேனும் பிழைகள் இருந்தால் தொலைபேசிகளின் வழியாக 14417 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டும் குறையைத் தெரிவிக்கலாம்.

3. ஒருமுறையேனும் உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தின் சர்வர் கணினியில் தலைமை ஆசிரியரின் EMIS ID அல்லது பள்ளியின் UDISE எண் மற்றும் Password வழியாக உள்நுழைய வேண்டும். அங்கு வலப்பக்கத்தில் உள்ள


Scanned with OKEN Scanner

www.Padasalai.Net

Manage பட்டனைச் சொடுக்கி Update Credentials பிரிவில் உள்ள Update பட்டனைச் சொடுக்க வேண்டும். இது ஒருமுறை மட்டுமே பயன்படுத்த வேண்டிய நிகழ்வாகும். இதற்குப் பின் சரவர் கணினியில் நம் EMIS ID ஐ விட்டு வெளியேறலாம்.




4. ஒருமுறையேனும் உயர்தொழில்நுட்ப ஆய்வகத்தின் சர்வர் கணினியில் ஆசிரியரின் EMIS ID அல்லது பள்ளியின் UDISE எண் மற்றும் Password வழியாக உள்நுழைய வேண்டும். அங்கு வலப்பக்கத்தில் உள்ள Manage பட்டனைச் சொடுக்கி Fetch Events பிரிவில் உள்ள Update பட்டனைச் சொடுக்க வேண்டும். இது ஒருமுறை மட்டுமே பயன்படுத்த வேண்டிய நிகழ்வாகும். இதற்குப் பின் சரவர் கணினியில் நம் EMIS ID ஐ விட்டு வெளியேறலாம்.





5. வினாடி வினா நடை பெறும் நாளன்று ஆசிரியர் உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் உள்ள சர்வர் கணினியில் உள்ள இணைய உலாவியை த் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணைய முகவரியை அணுக வே ண்டும்.

Scanned with OKEN Scanner


www.Padasalai.Net

6.ஆசிரியர் தன்னுடை ய EMIS ID அல்லது பள்ளியின் UDISE எண் மற்றும் Password ஐப் பயன்படுத்தி அதன் வழியாக உள்நுழைய வேண்டும்.

7. வினாத்தாள்கள் அதற்கான நிகழ்வுகளுடன் திரையில் அவருக்குத் தோன்றும்.





8. ஆசிரியர் நிகழ்வுக்கு எதிரே உள்ள Download QP பட்டனைச் சொடுக்கி பதிவிறக்கம் செய்ய வேண்டும். இப்பணியை வினாடி வினா தொடங்கும் நேத்துக்கு முன்பாகவே செய்திருக்க வேண்டும். இதற்குப் பிறகு ஆசிரியர் தன் EMIS ID இல் இருந்து வெளியேறி விடலாம்.




9. வினாடி வினா தொடங்கும் நேரத்திற்கு முன்பாகவே மாணவர்களை உயர் தொழில் நுட்ப ஆய்வகங்களில் உள்ள அனைத்து கணினிகளிலும் அமர வைக்க வேண்டும். மாணவர்கள் இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணை ய முகவரியில் தங்கள் EMIS IDஜப் பயன்படுத்தி உள்நுழைய வே ண்டும்.

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net




10. தற்போது திரையில் தெரிகின்ற வினா நிகழ்வுக்கு எதிரே உள்ள START பட்டனை மாணவர் சொடுக்கி தேர்வைத் தொடங்கலாம். இந்த படிநிலை களில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் 14417 என்னும் எண்ணைத் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.


11. மாணவர்கள் வினாத்தாளைக் கொண்டு வளரறி மதிப்பீட்டை மேற்கொள்ளலாம்.





12. கடைசி வினாவுக்கு பதிலளித்து Submit பட்டனைச் சொடுக்குவதன் மூலமாக மாணவரால் விடைத்தாளை ஒப்படை க்க முடியும்.

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net




13. விடை த்தாளை ஒப்படைத்த பிறகு தங்கள் செயல்திறனை மாணவர்கள் திரையில் காண இயலும்.





14. இப்போது மாணவர் தங்கள் EMIS ID இலிருந்து வெளியேறலாம். தன்னுடைய முறை க்காகக் காத்திருக்கும் அடுத்த மாணவர் வினாடி வினா மதிப்பீட்டை மேற்கொள்ளலாம் .


15. வினாடி வினா மதிப்பீட்டை வெற்றிகரமாக அனைத்து மாணவர்களுக்கும் நடத்திய பிறகு, ஓர் ஆசிரியர் சர்வர் கணினியில் இணைய உலாவியைத் (Firefox web browser) திறந்து http://locsrv.in:8080 என்னும் இணை ய முகவரியில் தன்னுடை ய EMIS ID ஐக் கொண்டு உள்நுழைந்து தன்னுடைய மாணவர்கள் அனைவரின்

Scanned with OKEN Scanner


www.Padasalai.Net

செயல்திறனை யும் குறிப்பெடுத்துக் கொள்ளலாம்.




16. இதற்கு முன்பாக தேர்வுக்காக இணைய இணைப்பைத் துண்டித்து வைத்திருந்தால் இப்போது மீண்டும் இணைய இணைப்பை ஏற்படுத்திக் கொள்ளலாம் . இதன் பிறகு இறுதியாக, ஆசிரியர் தங்கள் EMIS கணக்கில் வலப்பக்கம் உள்ள Manage பட்டனைச் சொடுக்கி Send Responses பிரிவின் கீழ் உள்ள Send பட்டனை அழுத்துவதன் மூலம் தங்கள் மாணவர்களின் செ யல்திறனை பிற்காலப் பயனுக்காகச் சே மித்து வைக்க வேண்டும்.




Scanned with OKEN Scanner